சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.15.09.2025.
OS.No.704/2018
PW 2 : தாமரைசெல்வன் (வயது 47) த/பெ.தங்கையன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் வழக்கின் மூன்றாம் நபர். வாதி தரப்பு 2 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. எனது ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.7**. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமான 20.10.2012 ஆம் தேதியிட்ட புரோநோட்டில் உள்ள 1 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் மேலே உள்ள முத்திரைத்தாளின் மீது உள்ள கையெழுத்து சிங்காரவேலனுடையது. இரண்டாவது முத்திரைத்தாளின் மீது உள்ள கையெழுத்து அவரது மனைவி அனுராதாவுடையது. மேற்படி 1,2 பிரதிவாதிகளான சிங்காரவேலனும், அனுராதாவும் வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்யும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நானும் இளங்கோவன் என்பவரும் உடன் இருந்தோம். என் முன்னிலையில் தான் 1,2 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்தார்கள்.

**<u>2,3 பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u>**

நான் தற்சமயம் குளக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் பிறந்தது முதல் அங்கு தான் குடியிருக்கிறேன். பிரதிவாதிகள் வீடு கட்டுவதற்கு 2012, அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் வாதியிடம் பணம் கேட்டார்கள். குறிப்பாக பணம் கேட்ட தேதி தெரியுமா என்றால் தெரியாது, வாதி பணம் கொடுத்த தேதி தெரியும். வாதி சொன்ன விவரங்களை வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்த விவரங்களை எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன். பணம் வாங்குவதற்கு 1,2 பிரதிவாதிகளும் 1 ஆம் பிரதிவாதியின் நண்பரும் வந்தார்கள்.

என்னையும் அவர்களுடன் அழைத்து சென்றார்கள். மேற்சொன்ன 1 ஆம் பிரதிவாதியின் நண்பரின் பெயர் என்ன என்றால் தெரியாது.

வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் இல்லை, எனது நண்பரின் தம்பி, அவரை எனக்கு நன்கு தெரியும். வாதி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை. வாதியும், பிரதிவாதிகளும் உறவினர்களா என்றால் இல்லை என் மூலம் வாதியும், பிரதிவாதிகளும் அறிமுகமானவர்கள். பிரதிவாதிகள் என்னை அழைத்துக்கொண்டு தான் வாதியிடம் பணம் கேட்க சென்றார்கள் என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதி எனது சகலை, 2 ஆம் பிரதிவாதி எனது மனைவியின் சகோதரி. வாதி பால்பண்ணை வைத்துள்ளார் மற்றும் விவசாயம் செய்து வருகிறார். அவருக்கு சொந்தமாக நிலம் உள்ளது. பிராமிசரி நோட்டில் வாதி எழுதி வைத்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் பிரதிவாதி எழுதி கொடுத்து, அவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் நான் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்தேன்.

புரோநோட்டின் பகுதி தொகையை எப்போது திருப்பி கொடுத்ததாக நான் கூறுகிறேன் என்றால் 11.09.2015ல் பிரதிவாதிகள் ரூ.25,000/- தொகையை வாதிக்கு திருப்பி கொடுத்துவிட்டார்கள். வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதிகள் புரோநோட்டுக்கான முழு தொகையையும் வாதியிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

எனது வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளபடி, பிரவாதிகள் வாதிக்கு காசோலை கொடுத்துள்ளதாகவும், அதன்பேரில் தனியாக வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்யவில்லை என்று வாதி என்னிடம் கூறினார். நானும் பிரதிவாதிகளும் உறவினர்கள் என்பதால் இன்று வரை அவர்களுடன் பேச்சு வார்த்தையில் இருக்கிறேன் என்றால் விசேசத்திற்கு போவேன்.

பிரதிவாதிகளுடன் எனக்குள்ள உறவு முறையில் எவ்வித சண்டைசச்சரவுகளும் இல்லை. வாதியிடமிருந்து பிரதிவாதிகள் பணம் எதுவும் வாங்கவில்லை என்றும், பிரதிவாதிகளிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் வாதியுடன் கூட்டு சேர்ந்து தாவா

புரோநோட்டை  தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எனது நெருங்கிய நண்பர் என்பதால் அதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் காசோலை கொடுத்ததாக நான் கூறியுள்ளேன் என்றும் அவ்வாறு எந்த ஆவணங்களும் வழக்கில் தாக்கல் செய்யாத நிலையில் மேற்படி விவரங்களை பற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நான் கூறும் சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/ signed/
தாமரைசெல்வன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி